https://arimanokku.com/ UGC-CARE LISTED AND PEER REVIEWED JOURNAL
ISSN: 2320-4842 (Print) ISSN: 3049-2688 (Online)

ARIMA NOKKU
ISSN: 2320 - 4842
19-2 April 2025

Published on 14, April-2025 ISSN: 3049-2688 (Online)

# சங்க இலக்கியத்தில் இசைக்கலைஞர்களின் வாழ்வியல்

**த. அமுதா**
முனைவர் பட்ட ஆய்வாளர் (பகுதி நேரம்), (Reg No: BDU1910630096)
தமிழ்த்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
பெரம்பலூர் - 621220, தமிழ்நாடு, இந்தியா.

**முனைவர் வீ. தனலெட்சுமி**
முனைவர் பட்ட நெறியாளர், (BDU06342000353)
தமிழாய்வுத்துறை, தந்தை ஹேன்ஸ் ரோவர் கல்லூரி (தன்னாட்சி)
(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)
பெரம்பலூர் - 621220, தமிழ்நாடு, இந்தியா.

## ஆய்வுச் சுருக்கம்

*பழந்தமிழர்கள் அனைத்துக் கலைகளிலும் சிறந்து விளங்கினர். சிற்பக்கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை நூலறிபுலவர், தச்சர், கம்மாளர், மண்ணீட்டாளர் என்றும் ஓவியக் கலையில் சிறந்து விளங்கியவர்களைக் கண்ணுள் வினைஞர் என்ற பெயராலும், இசை, நடனம் போன்ற கலையில் சிறந்து விளங்கிய கலைஞர்களை பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என்ற பெயராலும் அழைக்கப்படுவதை இலக்கியங்களின்வழி அறியமுடிகிறது. பிற துறை கலைஞர்களை விட இசையோடு தொடர்புடைய கலைஞர்கள் இலக்கியத்தில் சிறப்புப் பெற்றிருந்தனர். இதற்குக் காரணம் பிற கலையில் தேர்ச்சியடைந்தவர்களைப் பற்றிய செய்திகள் இலக்கியத்தில் பதிவு செய்யப்படவில்லை. ஆனால் இசையோடு தொடர்புடைய பாணர், கூத்தர், விறலியர், பொருநர் போன்றோரின் வாழ்வியலையும் வாழ்வோடு தொடர்புடைய இசைக்கலையின் சிறப்புக்களை அறிவதற்கும் ஏதுவாக இவ்வாய்வுக் கட்டுரை அமையும்.*

## முன்னுரை

*தொல்காப்பியர் காலத்திற்கு முன்னரே தமிழில் இசைக்கு இலக்கணம் கூறும் நூல்கள் இருந்துள்ளன. பழந்தமிழர் முத்தமிழில் இசைக்கலைக்கு மிகுந்த முன்னுரிமைக் கொடுத்துள்ளனர். இசைத்தமிழின் அடிப்படை இலக்கணம் பற்றிய குறிப்புகள் பலவற்றை இடைச்சங்க கால இலக்கண நூலாகிய தொல்காப்பியத்திலும் கடைச்சங்க கால நூலாகிய எட்டுத்தொகை, பத்துப்பாட்டிலும் காணக் கிடைக்கிறது. இசை என்பது பழந்தமிழரின் வாழ்வோடு பின்னிபிணைந்துள்ளது. இசைக்கலையோடு தொடர்புக் கொண்ட கலைஞர் களை பாணர், கூத்தர், விறலியர், பொருநர் என கலைத்திறமையால் பாகுபடுத்தப்பட்டனர். என்றாலும் அவர்கள் அனைவரையும் பாண் சுற்றத்தினர் என்றே அழைத்தார்கள். ஏனெனில் மற்ற கலைஞர்களை வழிநடத்திச் செல்லும் திறனைப் பாணர்கள் பெற்றிருந்தனர்.*

இதன் காரணமாக இலக்கியத்திலும் பாணனே அதிக இடத்தைப் பெறுகிறான். இசைக்கலைஞர்களின் வரிசையில் புலவர்களும் பாண் சுற்றத்தினரோடு தொடர்பு வைத்துக் கொண்டாலும் கலை என்னும் படைப்புத்திறனை நோக்கும்போது வேறுபட்டே காணப் பட்டனர். எனினும் பாண் சுற்றத்தினரின் வளர்ச்சிக்குப் பெரிதும் துணைபுரிந்தவர்களில் புலவர்களும் அடங்குவர் என்பது மறுக்க முடியாத உண்மை. இக்கலைஞர்கள் தமக்கு இருக்கும் இசையின் ஆர்வத்தை எவ்வாறு வெளிப்படுத்தினர். அவர்களின் வாழ்வில் இசை எவ்வகையில் சிறப்புற்றிருந்தன என்பதை ஆராய்வதே இவ்வாய்வுக் கட்டுரையின் நோக்கமாகும்.

## இசைக்கலை

இசை என்னும் சொல் இசைவிப்பது, உள்ளத்தை உருக்குவது, செவிக்கும் சிந்தனைக்கும் நல்லின்பம் தருவது என்று கூறப்படுகிறது. இசை என்பது மக்கள் உள்ளத்தோடு பொருந்துதல் எனப் பொருள்படுகின்றது.

“இசை” என்னும் சொல்லுக்கு ‘ஒலி‘, ‘கீர்த்தி’, ‘சொல்’, ‘பண்’ என்னும் பொருள் கூறுகின்றது[1] செந்தமிழ் அகராதி

“இசைதல்” என்பதற்கு பொருந்துதல், இணங்குதல் என்றும் இசைதல் என்பதற்கு ஒலிதல், சொல்லுதல், பாடுதல் என்றும் பல பொருள் கூறப்படுகின்றது.[2]

## இசையின் தோற்றம்

கலைகளில் முதலில் தோன்றியது இசைக் கலையாகும். காடுகளில் வாழும் பறவைகளின் ஒலியும் வண்டினங்களின் ஒலியும், விலங்குகளின் ஒலியும், அருவிகளின் ஒலியும் கொண்டு மனிதன் இசையை ஆராய்ந்தான். காடுகளில் வளர்ந்திருந்த மூங்கில்களின் துளைகளால்ஏற்பட்ட ஒலியானது இசையாக அமைந்தது. அத்துளைகளின் மூலமே இசையைக் கண்டறிந்து மனிதன் இசைக் கருவிகளை உருவாக்கினான்.

“ஐயாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே நம் நாட்டில் இசை சிறப்புடன் விளங்கின என்பதற்குச் சான்றுகள் கிடைத்துள்ளன. மொகஞ்சதரோ, ஹரப்பா ஆகிய இடங்களில் அகழ்வாராய்ச்சி செய்யும்போது சில இசைக் கருவிகள் கிடைத்துள்ளன. நரம்பு இசைக் கருவியான யாழின் தோற்றம் கொண்ட முத்திரையும், தோற்கருவியான முழவின் தோற்றம் கொண்ட இசைக்கருவியின் முத்திரையும் அங்கே கிடைத்துள்ளன. தோற் கருவியாகிய தவில் போன்ற ஒரு கருவியைக் கழுத்தில் கட்டிக் கொண்டிருகின்ற களி மண்ணால் செய்யப்பட்ட ஆணின் உருவம் அங்கே கிடைத்துள்ளது. ஏழுவிதமான இசை ஒலிகளை எழுப்பக்கூடிய விதத்தில் செய்யப்பட்டிருந்த ஊதுகுழல் கருவி அங்கே கண்டெடுக்கப்பட்டது[3]. ஆகவே நம் நாட்டில் மிகப் பழங்காலத்திலேயே இசை சிறப்புற்று விளங்கி வந்தன என்பதை அறியலாம்.

## தொல்காப்பியத்தில் இசை

தொல்காப்பியர் காலத்திலேயே இசைக்கலை வளர்ந்திருந்தது என்பதை,

**அளபு இறந்து இசைத்தலும் ஒன்றிசைநீடலும்**

**உளவெனும் மொழிப இசையொடு சிவணிய**

**நரம்பின் மறைய என்மனார் புலவர்[4]**

என்னும் நூற்பாவில் இசைக்கருவியைப் பற்றிய குறிப்பு இடம்பெற்றுள்ளது.

## இசைப் பாணர்கள்

இசைப்பாணர்கள் தம்முடைய இனிய குரலால் கேட்போர் மயங்குமாறு பாடுவதில் திறமைபெற்றிருந்தனர். இவர்களது வாழ்க்கை நிலையாகஓரிடத்தில் அமையாமல் நாடோடி வாழ்க்கை போல் அமைந்தது. பாணர்கள் மன்னனைக் காணச் செல்லும் போது சுற்றத் தினருடன் சென்று கலையை வெளிப்படுத்தி பரிசில் பெறுவது வழக்கம் என்பதை,

**இழைபெற்ற பாடினிக்குக்**

**குரல்புணர்சீர்க் கொளைவல் பாண்**
**மகனும்மே**

. . . . . . . . . .  . . . . . . . . . . . . . . .

**வெள்ளி நாரால் பூப்பெற் றிசினே[5]**

என்ற வரிகளின் மூலம் இசைப்பாணன் பாடினியுடன் சென்று மன்னனைப் புகழ்ந்து பாடியதால் பொன்னாலான தாமரையைப் பரிசிலாகப் பெற்றான் என்பதை அறிய முடிகிறது. இசைப்பாணர்கள் புதுமையாக அமைந்த இசைப்பாடல்களையும், நிலத்திற் கேற்றாற் போல் இனிய வரிப்பாடல்களை யும் பாடும் இயல்புடையவர்கள் என்பதை,

வரிநாவில் பனுவல் புலம் பெயர்ந்து
இசைப்ப[6]

என்பதன் மூலம் அறியலாம்.

“யாழ், குழல், அறிவுடைமை, மட்டம் சாய்ப்பு தாள அறிவுடைமை, பாடற்கு இசை அமைக்கும் திறமை, முதனடை வாரம், கூடை என்னும் நான்கு நடைகளில் பாடும் திறன், பல்வேறு மொழிகளில் பாடல்களை ஆராய்ந்த அறிவும், இசையை விரித்துரைக்கும் அதாவது இராக ஆலாபனை பாடும் பதினொரு வகைப்பாகுபாடுகளையும் அறிந்து ஆளத்தி பாடும் திறன் ஆகிய பல திறமைகளை உடையவனே இசைப்பாணர்”[7] என்று ஔவை சு.துரைசாமிபிள்ளை கூறுவதன் மூலம் இசைப்பாணரின் இலக்கணத்தை அறிந்துகொள்ள முடிகிறது. பாணர்கள் ஓய்வு நேரங்களில் தங்களுக்குள் பாடிக்கொள்வதும், போட்டி வைத்துக் கொள்வதும் வழக்கமாய் கொண்டிருந்தனர் என்பதை,

பாடல் பயின்றோரைப் பாணர்
செறுப்பவும்[8]

என்ற பரிபாடல் அடியின் மூலம் அறியலாம்.

## பொருநர்

பொருநரும் பாணரைப் போன்று இசை மரபைச் சார்ந்தவர். சங்க இலக்கியத்தில் பொருநர் என்ற சொல் வீரன், அரசன், கூத்துக்கலைஞன் என்ற பல பொருளில் பயன் படுத்தப்பட்டுள்ளது. “நாஞ்சில் பொருநன்”[9] “நல்நாட்டுப் பொருநன்”[10] என்று அரசனைக் குறிக்கவும், “கொல்லிப் பொருநன்”[11] தொண்டிப்பொருநன்”[12] என்று தலைவனைக் குறிக்கவும், பகைவர் என்ற பொருளினைக் குறிக்கவும் பொருநர் என்ற சொல் கையாளப்பட்டுள்ளது. பொருநரை ஏர்க்களம் பாடும் பொருநர், போர்க்களம் பாடும் பொருநர் என்று வகைப்படுத்தலாம். சங்க இலக்கியத்தில் குறிக்கப்படும் பொருநர் போர்க்களத்தோடு தொடர்புடையவராவர்.

போர்க்களப் பொருநர் போர்க்களத்திற்குச் சென்று வீரர்கள் உற்சாகம் அடையுமாறு முரசினைக் கொட்டி வஞ்சியைப் பாடினர் என்பதை,

ஒருகண் மாக்கிணை தெளிர்ப்ப ஒற்றிப்

பாடுஇமிழ் முரசின் இயல் தேர்த்தந்தை

வாடா வஞ்சி பாடினேன்[13]

என்று புறநானூறு சுட்டுகிறது. அதே போல் “பாசறையில் இருக்கும் மன்னரைக் காலையில் கிணையினைக் கொட்டி துயில் எழுப்பும் வழக்கம் கொண்டவர்களாகவும் பொருநர்கள் இருந்துள்ளனர்”[14]

சிறுபான்மை பொருநர்கள், பாணர் முதலிய கலைஞர்களைப் போல் அதிகமாக நாடோடி வாழ்க்கையை மேற்கொள்ளாமல் அரசர்களோடும், வள்ளல்களோடும் நெருங்கிய தொடர்பு கொண்டிருந்தனர். பொருநர்களுக்குப் போர்க்களத்திலும், அரண்மனையிலும் பெருமதிப்பு அளிக்கப்பட்டது. இதனால் அவர்களுடைய வாழ்க்கை பாதுகாப்பும், நிலைபேறும் கொண்டதாக விளங்கியது. நலங்கிள்ளியிடம் ஆதரவு பெற்ற பொருநர், நாங்கள் குளிர்ந்த வளங்கள் நிறைந்த சோழநாட்டுத் தலைவனான நலங்கிள்ளியின் பொருநராவோம். நாங்கள் பிற அரசர்களை எப்பொதும் பாடுவதில்லை. அதேபோல் பிற அரசர்களிடம் பரிசில் பெற விரும்புவதும் இல்லை. எப்போதும் எங்கள் தலைவன் புகழையும், பெருமையையும் மட்டுமே பாடுவோம் என்று பொருநர் கூற்றில் கோவூர் கிழார் பாடிய செய்தியை,

தண்சோழ நாட்டுப் பொருநன்

அலங்கு உளை அணி இவுளி

நலங்கிள்ளி நசைப் பொருநரேம்

பிறர்ப்பாடிப் பெறல் வேண்டேம்

அவற்பாடுதும், அவன் தாள் வாழிய[15]

என்று புறநானூறு புலப்படுத்துவதன் மூலம் பொருநர்கள் அரசர்களுடன் கொண்டுள்ள தொடர்பை அறியமுடிகிறது. மேலும் எழினி, பிடவூர் கிழார் மகன் பெருஞ்சாத்தன், கிள்ளிவளவன் போன்ற அரசர்களுடனும் பொருநர்கள் தொடர்பு கொண்டிருந்ததைப் புறநானூறு தெரிவிக்கிறது.

எல்லா பொருநர்களும் அரசனுடன் தொடர்பு கொண்டிருக்கவில்லை. சில பொருநர்கள் தம் கலைத்திறனை வெளிப்படுத்தி வறுமையைப் போக்கும் செயலில் ஈடுபட்டிருந்தனர். ஊரில் நடைபெறும் திருவிழாவே அவர்களின் கலையை வெளிப்படுத்தும் களமாக அமைந்தது. விழா முடிந்த பிறகு வேறு ஊரில் நடைபெறும் விழாவை எதிர்நோக்கும் நிலையிலேயே அவர்களது வாழ்க்கை அமைந்திருந்தது என்பதை,

அறாஅ யாணர் அதன் தலைப் பேரூர்ச்

சாறுகழி வழிநாள், சோறுநசை உறாது

வேறுபுலம் முன்னிய விரகுஅறி பொருந![16]

என்று கூறுவதன் மூலம் பொருநரின் வாழ்வியல் நிலையை அறியமுடிகிறது. பொருநர்கள் தனித்து இயங்காமல், பாணர், விறலி என்று கூட்டத்துடனே காணப் பட்டனர். பொருநர் யாழிசைத்துப் பாடுவது டன் கிணை, தடாரிப் பறை போன்ற கருவியை இசைக்கும் ஆற்றலையும் பெற்றிருந்தனர் என்பதை,

அவைபுகு பொருநர் பறையின் ஆனாது

கழறுப என்ப அவன் பெண்டிர்[17]

என்று கூறுவதன் மூலம் அறியலாம். பொருநர் யாழில் இசைக்கும் இசையைக் கேட்டு பாலை வழியில் செல்வோரைக் கொல்லும் கள்வர்கள், தம்முடைய கைகளில் வைத்திருந்த கொடிய கருவிகளைக் கீழே போட்டு விட்டு இசையில் மயங்கி நின்றனர் என்று பொருநராற்றுப்படைக் கூறுவதன் மூலம் பொருநரின் இசைத்திறனை அறிய முடிகிறது.

பொருநர்கள் தம் சுற்றத்தினருடன் ஊர் ஊராகச் சென்று மன்னரிடமும், மக்களி டமும் கலையை வெளிப்படுத்தி பரிசில் பெற்றனர். ஓய்மான் நல்லியாதனிடம் பரிசில் பெற்ற பொருநன் கூறும் போது “நைந்து கிழிந்திருந்த என்னுடைய உடையை மாற்றி புதிய உடையை அளித்து, பாம்பு சீறினாற் போன்று நாள்பட்டுக்கிடக்கும் கள்ளினை யும், இறைச்சியையும் அளித்து என்னுடைய வறுமை நீங்குமாறு செல்வத்தைக் கொடுத்த தோடு இனிமேல் பிறரிடம் சென்று பரிசில் பெற இரந்து நிற்பதை நினைக்காதவாறு பொருளை அளித்தான்”[18] என்று தான் பரிசில் பெற்ற நிலையைக் கூறுவதாக புறநானூறு குறிப்பிடுகிறது. இவ்வாறு மன்னர்கள் பல பரிசில்களையும், அணிகலன்களையும் அணிந்து பழக்கமில்லாத பொருநர் சுற்றத்தினர் காதில் அணியும் குழையை விரலிலும், விரலில் அணியும் மோதிரத்தைக் காதிலும் மாற்றி மாற்றி அணிந்தனர் என்பதை

விரற்செறி மரபின செவித் தொடக்கு நரும்

செவித்தொடர் மரபின விரற்செறிக் குநரும்

அரைக்கு அமை மரபின மிடற்றுயாக் குநரும்

மிடற்று அமை மரபின அரைக்குயாக் குநரும்[19]

என்று புறநானூறு கூறுவதன் மூலம் பொருநர் களின் கலைத்திறனைக் கண்டு, வறுமை நீங்குமாறு வரையறாது பொருளை பரிசிலாக மன்னர்கள் அளித்தனர் என்பதை அறிய முடிகிறது. மன்னனிடம் பொருள் பெற்ற பொருநன் தான் மட்டும் மகிழ்ச்சி அடை யாமல் வறுமையில் உள்ள மற்ற பொருநர் களையும் அம்மன்னனிடம் ஆற்றுப்படுத்தி னான். அவ்வாறு ஆற்றுப்படுத்தும்போது மன்னனைக் காணச் செல்லும்வழி, தலைவ னின் புகழ், தான் பெற்ற பரிசில் போன்ற வற்றைக் கூறி ஆற்றுப்படுத்தினான், இவற் றைப் பத்துப்பாட்டிலுள்ள பொருநராற்றுப் படை தெளிவாக எடுத்துக்காட்டுகிறது.

## விறலியர்

பாணர் குலத்தில் பிறந்த பிரிவினருள் விறலியும் ஒருவர். விறல் என்னும் சொல் வெற்றியைக் குறிக்கும் சொல்லாகும். மன்னரின் வெற்றியைப் புகழ்ந்து பாடுவதும், தன்னுடைய உள்ளக்குறிப்பை விரல்களின் மூலம் வெளிப்படுத்துவது இவரியல்பாதலால் விறலி என அழைக்கப்பட்டாள். சங்க இலக்கியம் விறலியை இசையோடும் ஆடலோடும் தொடர்புடையவளாக 42 இடங்களில் பதிவு செய்துள்ளது பாணர் குலத்தில் பிறந்த விறலியும், பாடினியும் ஒருவரே என்ற கருத்தும் நிலவுகிறது. ஆனால் தொல்காப்பியமும் பரிபாடலும் இருவரும் வேறுவேறானவர் என்று கூறுகிறது. இதனை

தோழி, தாயே, பார்ப்பன், பாங்கன்,

பாணன், பாடினி, இளையர், விருந்தினர்,

கூத்தர், விறலியர், அறிவர், கண்டோர்

யாத்த சிறப்பின் வாயில்கள் என்ப[20]

என்ற தொல்காப்பியரின் நூற்பாவழி அறிய முடிகிறது.

பாடும் இயல்பும் ஆடும் இயல்பும் உடையவள் விறலி என்பதை,

ஒருதிறம் பாடல் நல்விறலியர், ஒல்குபு நுடங்க[21]

என்றும் குரல் வழியாக பாலைப் பண்ணை

பாடினி பாடினாள் என்பதை

ஒருதிறம் பாடினி முரலும் பாலை
அம்குரலின்

நீடுகிளர் கிழமை நிறை குறை தோன்ற[22]

என்றும் பரிபாடல் கூறுவதன் மூலம் விறலியும் பாடினியும் வேறுவேறானவர்கள் என்பதை அறிந்துகொள்ளமுடிகிறது.

### கூத்தர்

தொல்காப்பியத்தில் பழந்தமிழ் மக்களிடம் இருந்து வந்த கூத்து வகைகளை 1. வேலன் ஆடும் வெறிக்கூத்து 2. வென்ற வீரர்கள் தம் அடையாளப் பூச்சூடி ஆடும் கருங்கூத்து 3. வெற்றியைப் பாராட்டிப் பெண்கள் ஆடும் வள்ளிக்கூத்து 4. களத்தை விட்டு ஓடாத இளைய வீரனுக்குக் காலிற் கழலைக் கட்டி இருபாலரும் ஆடும் கழனிலைக்கூத்து என்று குறிப்பிடுகிறது.

கூத்தர், பாணர், பொருநர், விறலியர் என தொல்காப்பியர் குறிப்பிடும் நால்வகைக் கலைஞருள் கூத்தர் என்போர் பாடுவதோடு ஆடவும் செய்யும் கலைஞராவர். "கூத்து என்ற சொல்லானது ஆடல், நாட்டிய நிகழ்ச்சி எனும் பொருளைக் குறிக்கிறது. பாணர், பறையரைப் போல குறிப்பிட்ட சாதிவரையறையைக் கூத்தர்கள் பெற்றிருக்க வில்லை. இதனை வைத்தே அவர்களுக்குள் சாதிவேறுபாடுகள் இல்லை என்பதை அறிய முடிகிறது. அவர்களின் கூத்து எண்வகை"[23] உணர்ச்சிகளையும் அனைத்து மனக் குறிப்பு களையும் வெளிக்காட்டுகிறது என்ற நச்சினார்க்கினியர் கூற்றின் வழி அறியலாம்.

சங்ககாலத்தில் வெற்றியின் போதும் மகிழ்ச்சி யின் போதும் திருவிழாக் காலங்களின் போதும் ஆண்களும் பெண்களும் சேர்ந்து பெருங்கூட்டத்தினருடன் ஆடிப்பாடினர். கூத்தர் மற்ற கலைஞர்களைப் போலவே மன்னர்களையும் மக்களையும் நாடிச் சென்று கலையை வெளிப்படுத்தினர். ஊரில் உள்ள பொது இடத்தில் கூத்தை இவர்கள் நிகழ்த்தியதால் பொது மக்களிடம் நெருக்க மான உறவைக் கொண்டிருந்தனர். இவர் களின் கலையை வெளிப்படுத்தும் இடத்தை மன்றம் அல்லது மன்று என்று அழைத்தனர்.

கூத்து என்பது பலர் சேர்ந்து ஆடக்கூடிய குழு ஆடலாகும். சங்க காலத்தில் கூத்தர் குழுவோடு சேர்ந்து ஆடக்கூடியவர்களுக்குத் தலைவராக இருந்திருக்க வேண்டும். கூத்துத் தொழிலால் பெயர் பெற்ற "கூத்தர்" என்ற சொல் சங்க இலக்கியத்தில் ஓர் இடத்தில் மட்டுமே பதிவு செய்யப்பட்டுள்ளது. சோழன் நலங்கிள்ளியின் நாட்டில் எல்லா வளங்களும் நிறைந்திருப்பது கூத்தருடைய ஆடுகளத்தை ஒத்திருக்கும் என்பதை,

பூம்போது சிதைய வீழ்ந்தென கூத்தர்

ஆடுகளம் கடுக்கும் அகநாட்டையே[24]

என்ற முதுகண்ணனின் கூற்றின் வழி கூத்தர் பற்றிய செய்தி காணப்படுகிறது. இதில் கூத்தருடைய ஆடுகளம் உவமையால் சுட்டப் படுகிறதே தவிர கூத்தருடைய வாழ்க்கை பதிவு செய்யப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

தொல்காப்பியர் கூறும் ஆற்றுப்படையினருள் ஒருவரான கூத்தரைப் பற்றி மலைபடுகடாம் (அ) கூத்தராற்றுப்படையில் தெளிவாக விளக்கப்பட்டுள்ளது. அந்நூலிலும் கூத்தர் என்றசொல் கையாளப்படவில்லை. கூத்தரை வயிரியர், கோடியர், கண்ணுளர் போன்ற பெயர்களில் மட்டுமே பதிவு செய்யப் பட்டுள்ளனர். இவர்களை உரையாசிரியர்கள் கூத்தர் என்றே கூறுகின்றனர்.

### வயிரியர்

வயிரியர் என்ற சொல்லானது வயிர் என்ற இசைக்கருவியைக் குறிக்கும் சொல்லிலிருந்து வந்ததாகும். உரையாசிரியர்கள் இவர்களை கூத்தர் என்றே குறிப்பிடுகின்றனர். வயிரியரைப் பற்றி சங்க இலக்கியத்தில் சுமார் 15 இடங்களில் குறிப்புகள் காணப் படுகின்றன. இவற்றில் வயிரியர் இசைக் கலைஞராகவே பதிவு செய்யப்பட்டுள்ளனர். அன்னி என்பவன் குறுக்கைப் போர்க் களத்தில் திதியனுடைய புன்னை மரத்தின் பெரிய அடியினை வெட்டியபோது வயிரியர், அனது புகழைப் பாடினர் என்பதை,

புன்னை குறைந்த ஞான்றே வயிரியர்

இன் இசை ஆர்ப்பினும் பெரிதே[25]

என்று அகநானூறு வயிரியர் போர்க் களத்தில் சென்று பாடியதை உணர்த்து கின்றது. போர்க்களத்தில் மட்டுமல்லாமல் அரசவையிலும் வயிரியர் சிறப்புப் பெற்றிருந்தனர்.

பாணர் வருக பாட்டியர் வருக

**யாணர் புலவரொடு வயிரியர் வருகென**[26]

என்று மதுரைக்காஞ்சிக் கூறுவதன் மூலம் பாணர், புலவர் போன்றோருடன் வயிரியரையும் இணைத்துக் கூறும் அளவிற்கு அரசவையில் அவர்கள் சிறப்புப் பெற்றிருந்ததை அறியமுடிகிறது. மன்னர்கள் வயிரியர் கலைத்திறனைப் பாராட்டி பரிசில்களை வழங்கினர். அவ்வாறு பெற்ற பரிசில்களைத் தான் மட்டும் அனுபவிக்காமல், பரிசில் பெறாதவனையும் ஆற்றுப்படுத்தினான். நன்னனிடம் பரிசில் பெற்ற கூத்தர் (வயிரியர்) பெறாதவரிடம் தாம் பெற்ற பரிசிலைக் கூறும் போது, நன்னனுடைய மலைநாட்டில் உள்ள மக்களின் உபசரிப்பையும் கூறினர். நன்னனுடைய மலை நாட்டில் வாழும் மக்களிடம், 'யாம் நன்னனின் கூத்தர் என்று கூறினால் அவர்களுடைய வீட்டிற்குள் அழைத்துச் சென்று பல நாட்களுக்கு முன்பே உறவு கொண்டவர்கள் போல் பழகுவர்" என்று கூறி ஆற்றுப்படுத்தியதை,

**நோனாச் செருவின் வலம்படு நோன்தாள்**

**மான விறல்வேள் வயிரியம் எனினே**

**நும்மில் போல நில்லாது புக்குக்**

**கிழவிர் போலக் கேளாது கெழீஇ**[27]

என்றுமலைபடுகடாம் வயிரியர்க்கும் மன்னர்களுக்குமான உறவை வெளிப்படுத்துகிறது.

## கண்ணுளர்

கண்ணுளர் என்ற சொல்லுக்கு கண்ணாளர், சாந்திக்கூத்தர் மதங்கர், கூத்தர் என்று அகராதி பொருள் கூறுகிறது.[28] கண்ணுளர் என்பதற்கு "பார்ப்போரின் கண்ணைக் கவர்வதால் அவர்கள் கண்ணுளர் எனப் பட்டனர்"[29] என்று நச்சினார்க்கினியர் உரை கூறுகிறார். கண்ணுளரைப் பற்றி சங்க இலக்கியத்தில் இரண்டு இடங்களில் குறிப்பு காணப்படுகின்றது. பதிற்றுப்பத்தில் கண்ணுளர் என்பதை உரையாசிரியர்கள் சாந்திக் கூத்தர் என்றே கூறுகின்றனர். இவர்களுக்கு மன்னர்கள் பொன், அணிகலன்கள் போன்றவற்றைப் பரிசாக அளித்தனர். சாந்திக்கூத்து என்பது தலைவனின் சாந்த குணங்களைப் போற்றி பாடுவதும் ஆடுவதும் ஆகும்.

மலைபடுகடாத்தில் அழகிய பேரணிகலன்களைப் பரிசாகப் பெறும் தகுதியையுடைய கலைஞர்களின் சுற்றத்தினருக்குத் தலைவனே என்று கண்ணுளர் அழைக்கப்படுவதை,

**கலம் பெறு கண்ணுளர் ஒக்கல் தலைவ**[30]

என்ற வரியின் மூலம் அறியலாம். மேலும் நச்சினார்க்கினியர் இதற்கு உரை கூறும்போது, கண்ணுளரை ஆடற்கலையில் தேர்ச்சிப் பெற்ற கலைஞர் என்றே பொருள் கூறுகிறார். இவற்றின் மூலம் கண்ணுளர் என்போர் இசையோடு கூத்து நிகழ்த்துபவர் என்பதும் மன்னர்களுடன் நெருங்கிய தொடர்பைக் கொண்டுள்ளவர் என்பதையும் அறியமுடிகிறது.

## கோடியர்

கோடியர் என்ற சொல் கோடு என்பதிலிருந்து தோன்றியதாகும். கோடு என்பது சங்கு, விலங்கின் கொம்பு என்று கருவிகளைக் குறிக்கும் சொல்லாகும். எனவே இவற்றை இசைப்பதால் கோடியர் எனப் பெற்றிருக்கக் கூடும். இவரை கூத்தர் என்றே உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர். கோடியர் ஆடுவதிலும், கருவி இசை இசைப்பதிலும் தேர்ச்சிப் பெற்றிருந்தனர்.

கோடியர் விழாக்காலத்தில் வெவ்வேறு வேடங்களைப் புனைந்து தம் கலைத்திறனை வெளிப்படுத்தினர். அவ்வாறு வெவ்வேறு வேடம் புனைவது போன்று இவ்வுலகம் தோன்றி அழியக்கூடியது என்பதை,

**கோடியர் நீர்மை போல முறை முறை**

**ஆடுநர் கழியும் இவ்வுலகத்து**[31]

என்று புறநானூறு உவமித்துக் கூறுவதன் மூலம் பல வேடங்களில் கோடியர் ஆடினர் என்பதை அறியலாம்.

கோடியர் யாழிசைக்கும் திறனைப் பெற்றிருந்தனர். இவர்களின் யாழ் ஒலி வேடன் வலையில் அகப்பட்ட கணத்துள் என்னும் பறவையின் ஒலியைப் போன்றிருக்கும் என்பதை,

**பார்வை வேட்டுவன் படுவலை வெரீஇ,**

**நெடுங்கல் கணத்துள்அம் புலம்புகொள் தெள்விளி**

**கரம்செல் கோடியர் கதுமென இசைக்கும்**

**நரம்பொடு கொள்ளும் அத்தத்து**[32]

என்ற நற்றிணைப் பாடல் புலப்படுத்துகிறது. மேலும் பண்ணிசைக் கருவிகள் யாழ் மட்டுமின்றி “முழவு”[33] “பறை”[34] உள்ளிட்ட தாள இசைக்கருவிகளையும் இசைக்கக் கூடியவர்களாக இருந்தனர்.

கோடியர், தன் சுற்றத்தினருடனே பரிசில் பெறவும், கலையை வெளிப்படுத்தவும் செல்வர். கோடியர் சுற்றத்தினருள் விறலியும் ஒருவர் என்பதை,

**ஆடுமயில் முன்னது ஆக, கோடியர்**

**விழவுகொள் மூதூர் விறலி பின்றை**

**முழவன் போல[35]**

என்ற அகநானூற்றுப் பாடல் மூலம் அறியலாம். விழா நடைபெறும் ஊரில் கோடியருடன் விறலியும் சேர்ந்து ஆடினாள் என்பதும், விறலிக்குப் பின்னால் நின்று முழவன் முழவினை இசைத்தான் என்பதன் மூலமும் பல இசைக் கலைஞர்கள் கோடியரின் கூத்தில் இடம்பெற்றிருந்தனர் என்பதையும் அறியமுடிகிறது.

கோடியர் தம் வறுமையின் காரணமாக, கலையை வெளிப்படுத்தி பரிசில் பெற மன்னர்களை நாடிச் செல்வது இயல்பு. அவ்வாறு வந்தவர்க்கு மன்னர்கள் பொன், அணிகலன் உள்ளிட்ட பரிசில் பொருட்களை அளிப்பர். கடல் பிறர்கோட்டிய செங்குட்டுவன், தன்னை நாடி வந்த கோடியருக்கும் அவனது சுற்றத்தினருக்கும் குதிரைகளைப் பரிசாக வழங்கினான் என்பதை,

**கோடியர் பெருங்கிளை வாழ, ஆடுஇயல்**

**உளைஅவிர் கலிமாப் பொழிந்தவை எண்ணின்[36]**

என்ற பதிற்றுப்பத்துப் பாடலின் மூலம் அறியலாம். கூத்தரும் கோடியரும் நறுமணம் மிகுந்த பூக்களையுடைய சுரப்புன்னைகளையும், மலைகளையும் உடைய நாட்டினை ஓரி பரிசாக அளித்தான். மேலும்,

**. . . . . . . . . . . . நளிசினை**

**நறும்போது கஞரிய நாகுமுதிர் நாகத்துக்**

**குரும்பொறை நன்னாடு கோடியர்க்கு ஈந்த[37]**

என்று சிறுபாணாற்றுப்படை கோடியர் பெற்ற பரிசிலைக் கூறுவதன் மூலம் கோடியரின் கலைத்திறனையும், மன்னர்களுடன் கொண்டிருந்த நெருக்கமான உறவையும் அறியமுடிகிறது.

### கிணைவன்

கிணைவன் என்ற சொல் கிணை என்னும் தோற்கருவியை இசைக்கும் கலைஞனைக் குறித்தது. கிணை என்பதற்கு மருதப்பறை, தடாரிப்பறை, உடுக்கை என்று அகராதி பொருள் தருகிறது.[38] மன்னர்களை காலையில் பாடி துயில் எழுப்புவதற்கும், போர்க் களத்தில் வீரர்களுக்கு ஊக்கமூட்டவும் கிணையைப் பயன்படுத்தினர். கிணை இசைப்பவரை கிணைப்பொருநன், கிணை மகன், கிணைவர், கிணைமகள் என்று அழைத்தனர். கிணைவன் மன்னருடன் நெருங்கிய தொடர்பு கொண்டு எப்போதும் அவர்களைச் சார்ந்தே இருந்தனர் என்பதை,

**இரும்பறைக் கிணைமகன் சென்றவன் பெரும்பெயர்**

**சிறுகுடி கிழான் பண்ணற் பொருந்தி[39]**

என்ற புறநானூற்று அடிகள் மூலம் அறியலாம்.

கிணையர்கள் மன்னர்களுடன் இருந்தாலும் வறுமையிலேயே பெரும்பாலும் காணப் பட்டனர். வறுமையின் காரணமாகக் கிணை மகள், குப்பையில் விளைந்த கீரையை பறித்து உப்பில்லாமல் பிறர் அறியாதவாறு கதவை அடைத்து சமைத்தாள் என்பதை,

**ஒல்குபசி உழந்த ஒடுங்கு நுண் மருங்குல்**

**வளைக்கைக் கிணைமகள் வள்ளுகிர்க் குறைத்த**

**குப்பைவேளை உப்பிலி வெந்ததை[40]**

என்று சிறுபாணாற்றுப்படை கிணையர்களின் வறுமையை சித்தரிக்கின்றது.

பகைவரின் போரினால் நெருங்கமுடியாத பாரியின் பறம்பு மலையைப்பெற, கிணை மகளுடன் ஆடியும், பாடியும் சென்றால் பரிசிலாக்க் கிடைக்கும் என்பதை,

**அளிதோ தானே, பேர் இருங்குன்றே**

**வேலின் வேறல் வேந்தர்க்கோ அரிதே**

**நீலத்து, இணைமலர் புரையும் உண்கண்**

**கிணைமகட்கு எளிதால், பாடினள் வரினே[41]**

என்று புறநானூறு கூறுவதன் மூலம்

மன்னர்களிடம் கிணைமகள் பெற்றிருந்த செல்வாக்கையும், கலை வெளிப்பாட்டையும் உணர முடிகிறது.

### அகவர்

அகவர் என்பவர் தொன்றுதொட்டு வரும் பழங்குடியில் தோன்றிய முன்னோரின் புகழ் பாடுவோராவர். இவர்கள் முன்னோரைப் பாடும்போது அகவிப் பாடுவதால் அகவர் என அழைக்கப்பட்டனர். அகவர், அகவலன், அகவுநர் போன்ற பெயர்கள் அனைத்தும் இலக்கியத்தில் பாடும் தொழிலையுடையவர் களையே குறித்தது. இவர்களை பாணர் என்றே உரையாசிரியர்கள் குறிப்பிடுகின்றனர்.

போர்க்களத்தைவாழ்த்திப் பாடும் மரபுடைய அகவலன், போர்க்கள நிகழ்ச்சிகளை நேரில் கண்டு அதனை மக்களிடத்தில் பண்ணி சைத்து நுண்ணிய கோலைக் கொண்டு வெளிப்படுத்தி மன்னனிடமிருந்து குதிரை யைப் பரிசாகப் பெறுவான் என்பதை,

**மன்றம் படர்ந்து மறுகு சிறைப்புக்கு**

**கண்டி நுண்கோல் கொண்டு களம் வாழ்த்தும்**

**அகவலன் பெறுக மாவே**[42]

என்று பதிற்றுப்பத்து குறிப்பிடுகிறது. விடியற் காலையில் பாசறையிலும், அரண்மனையி லும் அரசனைப் புகழ்ந்து பாடி, துயில் எழுப்பி குதிரைகளையும், தேரையும் பரிசாகப் பெற்றனர் என்பதன் மூலம் அகவர்கள் கலையை வெளிப்படுத்தியதோடு மன்னனைத் துயில் எழுப்பும் பணியையும் மேற்கொண்டனர் என்பதை அறியமுடிகிறது.

### கலப்பையர்

சங்க காலத்தில் பாண் சுற்றத்தினர் கலையை வெளிப்படுத்த பல ஊர்களைத் தாண்டி மன்னர்களைக் காணச் செல்வது வழக்கம், அப்படிச் செல்லும்போது தன்னுடைய இசைக்கருவிகளையும், பிற பொருட்களையும் பையில் கட்டி எடுத்துச் செல்வர். அவ்வாறு எடுத்துச் செல்லும் பையைக் கலப்பை என்று கூறுவர். இக்கலப்பையை உடையவர் கலப்பையர் என்றழைக்கப்பட்டனர். உரையா சிரியர்கள் இவர்களைக் கூத்தர் என்றே குறிப்பிடுகின்றனர்.

கலப்பையர் எனப்படும் கூத்தர், தன்னுடைய இசைக்கருவிகளுடன் பல ஊர்களுக்கும் சென்று கூத்து நிகழ்த்துவர். கூத்து முடிந்ததும் இசைக்கருவிகளைப் பையிலிட்டு அவ்விடத்தை விட்டு நீங்குவர் என்பதை,

**. . . . . . . . . . சிறுபல் இயத்தொடு**

**பல் ஊர் பெயர் வனர் ஆடி, ஒல்லென**

**தலைப்புணர்த்து அசைத்த பல்தொகைக் கலப்பையர்**[43]

என்ற அகநானூற்றுப் பாடலின் மூலம் அறியலாம். இவர்கள் மக்களிடத்தில் கூத்து நிகழ்த்தியதோடு மன்னர்களின் புகழ்பாடு வோராகவும்[44] இருந்துள்ளனர். ஆடற்கலை மட்டுமின்றி பல்வேறு இசைக்கருவிகளை இசைக்கும் திறமைப் பெற்ற கலப்பையர்கள், கலையை வெளிப்படுத்திச் செல்லும்போது, இசைக்கக்கூடிய கருவிகளை ஒரு பக்கத்தி லும், ஆடலுக்குரியவற்றை மற்றொரு பக்கத்தி லும் பைகளாகக் கட்டி தூக்கிச் சென்றனர். வழியில் துன்பம் வராமலிருக்க கடவுளை வணங்கினர் என்பதை,

**. . . . . . . . . தூம்பொடு சுருக்கி,**

**காவில் தகைத்த துறைகூடு கலப்பையர்**

**கைவல் இளையர் கடவுள் பழிச்ச**[45]

என்ற பதிற்றுப்பத்துப் பாடலின் மூலம் அறியலாம்.

### பாடினி

பாடினி என்பவள் பாடும் தொழிலை மேற் கொள்பவள். பாணனுடன் மன்னர்களைக் காணச் சென்று கலையை வெளிப்படுத்துப வளாக பாடினி விளங்கினாள். பாணன் என்பதற்குப் பெண்பாற் சொல்லாகப் பாடினி என்றும், பாட்டியர் என்றும் இலக்கியத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளது.

போர்க்களத்தில் பகைவரை வென்ற வெற்றிச் சிறப்பையும், அரசனது வலிமையான வீரத்தைப் பாடுவதும், பாலைப் பண்ணைப் பாடும் திறனுடையவளாகப் பாடினி காணப் பட்டாள் என்பதை,

**. . . . . . . . . . . வார் உற்று**

**விசிபிணிக் கொண்ட மண்கனை முழவின்**

**பாடினி பாடும் வஞ்சிக்கு**[46]

**ஒரு திறம் பாடினி முரலும் பாலை அம்குரலின்**[47]

என்று பாடினி சிறப்பிக்கப்படுகிறாள்.

பாடினி பெண்மயிலைப் போன்ற தோற்றம் கொண்டவளாகக் காணப்பட்டாள் என்று பாடினியின் உருவச்சிறப்பை பொருநராற்றுப் படை தெரிவிக்கிறது.[48] பாடினி அரசர் களைப் புகழ்ந்து பாடும் போது மாலை, அணிகலன் போன்றவற்றைப் பெறுவாள். கரிகாலனைப் பாடிய பாடினி பொன்னரி மாலையினையும், முத்து மாலையினையும் பெற்றாள்[49] என்று பொருநராற்றுப்படை சுட்டுகிறது. பெரும்பாலும் மன்னர்கள் பாடினிக்குப் பொன்னரிமாலையைப் பரிசாக அளிக்கும் வழக்கத்தைக் கொண்டி ருந்தனர். அதே போல தனக்குப் பரிசில் அளிக்கும் மன்னன் இறந்துவிட்டால் பாடினி மலரைச் சூடும் வழக்கம் இல்லை என்பதை "பாடினி அணியாற்"[50] என்று கூறுவதன் மூலம் அரசர்களுக்கும், பாடினிக்கும் உள்ள தொடர்பை அறிய முடிகிறது.

## முடிவுரை

சங்க காலத்தில் வாழ்ந்த இசைக்கலைஞர்கள் பெரும்பாலும் வறுமையிலேயே வாழ்ந்துள்ள னர். அவர்கள் தங்களுடைய வறுமையை நீக்க பிற மன்னர்களையும், வள்ளல்களையும் நாடிச் சென்று தங்களுடைய கலைத்திறனை வெளிப்படுத்தி பொன், பொருள், மாலை, நாடு, குதிரை, தேர் போன்றவற்றை பரிசி லாகப் பெற்றனர். பாணர் முதலிய கலைஞர் கள் தங்களுக்கென்று தனியான சமுதாய அமைப்பு இன்றி எல்லா நிலங்களிலும் பரவலாகக் காணப்பட்டனர். வயிரியர், கோடியர், கண்ணுளர் போன்றோரை உரையாசிரியர்கள் கூத்தர் என்றே குறிப்பி ட்டுள்ளனர். விறலி என்பவள் புற இலக்கியத்தில் பாணர் சுற்றத்தினருடன் சென்று கலையை வெளிப்படுத்தி பரிசில் பெருபவளாகவும், அக இலக்கியத்தில் தலைவன், தலைவியிடம் ஊடல் தீர்க்கும் வாயிலாகவும் செயல்பட்டுள்ளனர். அத்தோடு அகவர், கிணைவன், கலப்பையர், பாடினி போன்றோரும் இசைக்கலைத் துறைக்கு பெரும் தொண்டாற்றி வந்துள்ளனர்.

## சான்றெண் விளக்கம்

1. ந.சி. கந்தையா, செந்தமிழ் அகராதி, பக்.58
2. மேலது, பக்.58
3. ப. சாமியப்பன், வாழ்க்கையை வளமாக் கும் கலைகள், பக்.37
4. இளம்பூரணர், தொல், பக்.27
5. புறம், பா.11: 14-18
6. மேலது, பக்.135:1
7. ஔவை சுதுரைசாமிபிள்ளை, சிலப்பதி கார ஆராய்ச்சி, பக்.33,34.
8. பரிபா, பா. 9:73
9. புறம், பா.140:1
10. மேலது, பா.70:9
11. மேலது, பா.152 : 31
12. நற், பா. 18:4
13. புறம், பா.394: 7-9
14. மேலது, பா. 397 : 8-10
15. மேலது, பா. 382 : 3-7
16. பொருந, பா. 21-23
17. அகம், பா. 76 : 5-6
18. புறம், பா. 376: 10-18
19. மேலது, பா. 378 : 14-17
20. தொல். கற். நூ. 191
21. பரிபா, பா. 17
22. மேலது, பா. 17
23. தொல். பொருள். புறம், நச்சர் உரை, நூ. 91, பக். 55
24. புறம், பா.28: 13-14
25. அகம், பா. 45 : 11-12
26. மதுரை, பா. 749-750
27. மலை, பா. 163-166
28. தமிழ் – தமிழ் அகராதி, பக்–283
29. மதுரை, 518, நச்சர் உரை, பக்.283
30. மலை, பா.50
31. புறம், பா.29: 23-24
32. நற், பா. 212 : 1-4
33. மலை, பா. 143
34. மேலது, பா. 236
35. அகம், பா. 352 : 4-6
36. பதிற், பா. 42 : 14-15
37. சிறுபா, பா. 107 - 109
38. தமிழ் அகராதி, பக். 369
39. புறம், பா. 388 : 3-4
40. சிறுபா. பா. 135 - 137
41. புறம், பா. 111 : 1-4
42. பதிற், பா. 15 : 26
43. அகம், பா. 301 : 20-22
44. பதிற், பா. 15 : 26
45. மேலது, பா. 41 : 4-6
46. புறம், பா. 15 : 22-24
47. பரிபா, பா. 17 : 17
48. பொருந, பா. 25-47
49. மேலது, பா. 161 - 162
50. புறம், பா. 242 : 3